# அரசுத் தேர்வுகள் இயக்ககம் சென்னை–6

## மேல்நிலை இரண்டாம் ஆண்டு (+2) சிறப்புத் துணைத்தேர்வு ஜுன் 2019

## தேர்வு முடிவுகளை தற்காலிக மதிப்பெண் சான்றிதழ்களாகவே பதிவிறக்கம் செய்து கொள்ளுதல், விடைத்தாள் நகல் மற்றும் மறுகூட்டலுக்கு விண்ணப்பிக்கும் முறைகள்

## செய்திக்குறிப்பு

நடைபெற்ற, ஜுன் 2019, மேல்நிலை இரண்டாம் ஆண்டு (+2) சிறப்புத் துணைத் தேர்வெழுதிய தனித்தேர்வர்கள் (துட்கல் தனித்தேர்வுர்கள் உட்பட) தேர்வு முடிவினை, தற்காலிக மதிப்பெண் சான்றிதழ்களாகவே 10.07.2019 (புதன்கிழமை) பிற்பகல் 2.00 மணி முதல் இணையதளத்திலிருந்து தங்களது பதிவெண் மற்றும் பிறந்த தேதியை பதிவு செய்து ஆன்லைனில் பதிவிறக்கம் செய்துகொள்ளுமாறு அறிவிக்கப்படுகிறது.

**வழிமுறைகள் பின்வருமாறு:**

1. தனித்தேர்வர்கள் வருகிற **10.07.2019** முதல் தமது தற்காலிக மதிப்பெண் சான்றிதழ்களை www.dge.tn.nic.in என்ற இணையதள முகவரியிலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

2. மேற்படி இணையதள முகவரிக்குள் Login செய்தவுடன்

   **“ Provisional Mark Sheet**
   **HSE Second Year Result – June 2019”**

   என தோன்றும் வாசகத்தினை “Click” செய்தால் தோன்றும் பக்கத்தில் தேர்வர்கள் தங்களது பதிவெண் மற்றும் பிறந்ததேதி ஆகிய விவரங்களை பதிவு செய்து, தமது தற்காலிக மதிப்பெண் சான்றிதழ்களை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம் என அறிவிக்கப்படுகிறது.

**விடைத்தாள் நகல் மற்றும் மறுகூட்டலுக்கு விண்ணப்பிக்கும் முறை:**

ஜுன் 2019, தேர்வுக்கான விடைத்தாள் நகல் மற்றும் மறுகூட்டலுக்கு விண்ணப்பிக்க விரும்பும் தனித்தேர்வர்கள் உரிய முதன்மைக் கல்வி அலுவலர் அலுவலகத்திற்கு **11.07.2019 மற்றும் 12.07.2019** ஆகிய இரண்டு நாட்களில் நேரில் சென்று உரிய கட்டணம் செலுத்தி பதிவு செய்து கொள்ளவேண்டும்.

<u>விடைத்தாள் நகல் (**Copy of the Answer Sheet**) பெறுவதற்கான **கட்டணம்**:</u>

ஒவ்வொரு பாடத்திற்கும் – ரூ.275/–

**<u>மறுகூட்டல் (Re-totalling) கட்டணம் :</u>**

உயிரியல் பாடத்திற்கு மட்டும் – ரூ.305/–
ஏனையப் பாடங்கள் (ஒவ்வொன்றிற்கும்) – ரூ.205/–

விண்ணப்பித்தபின் வழங்கப்படும் ஒப்புகைச்சீட்டில் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்ப எண்ணை (Application Number) பயன்படுத்தியே தேர்வுத் துறையால் பின்னர் அறிவிக்கப்படும் தேதியில் விடைத்தாட்களின் நகல்களை இணையதளத்தில் பதிவிறக்கம் செய்துகொள்ள முடியும். மறுகூட்டல் முடிவுகள் பற்றியும் அறிய இயலும்.

**ஒம்/–**
**அரசுத் தேர்வுகள் இயக்குநர்**

<u>இடம் :</u> சென்னை–600 006.
<u>நாள் :</u> 09.07.2019